www.tamilarangam.net

## ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்

உறுப்பினரும் — அதன்

## மக்கள் விடுதலைப் படையினது

மத்திய இராணுவ ஆணைக்குழுவின் உறுப்பினருமான



# தோழர் இரவீந்திரன் (இராஜன்) அவர்கட்கு

# வீர வணக்கம்

மக்களுக்காக இன்னுயிர் ஈந்த தோழர் இரவீந்திரன் அவர்கள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி [EPRLF]யின் யாழ் பிராந்தியக் குழுவின் முன்னாள் உறுப்பினரும், ஸ்தாபனத்தின் வெகுஜன அமைப்பான ஈழமக்கள் விடுதலை முன்னணியின் [EPLF] ஸ்தாபகர்களுள் ஒருவருமாவர். தோழர் அவர்கள், ஈழ வாலிப முன்னணி [EYF], ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி [EWLF]யின் ஆரம்பகால அமைப்பாளராகவும், ஈழ மாணவர் பொதுமன்றத்தின் [GUES] நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பணியாற்றி ஈழ மக்கள் புரட்சிக்கு தனது வரலாற்றுக் கடமையை ஆற்றி வீர மரணம் எய்தியுள்ளார்.

சர்வதேச விடுதலை இயக்கமொன்றின் போர்முனைப் பாசறையில் பயிற்சி பெற்றவரும், மாக்சிச லெனினிசத்தின் மீது வழுவாத பற்றும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வளர்ச்சிக்காக கடுமையான உழைப்பும், ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் தீரமிகு உறுதியும்கொண்ட உற்ற தோழர் சிந்தனையை நிறுத்தியுள்ளார்.

**"கட்சியைப் பலப்படுத்தவும்"** என்ற இனிய தோழனின் இறுதி வாக்கியத்தை எம்மவர் இதயப் போர்ப்பறையாக்குவோம்.

**மக்களுக்காக மடிந்த மகத்தான தோழனுக்கு**
**புரட்சிகர வீர வணக்கத்தை செலுத்துவோம்!**

---

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி [EPRLF]**

---

அரிவானந்தர்—குடத்தை. 8—6—1985

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்